சுருக்கம்

அறிவிப்புகள் – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை – பயிற்சிப் பிரிவு – கடலூர் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ரூ.230 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்ட – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (எஸ் 1) துறை

அரசாணை (நிலை) எண். 44 நாள் 27.3.2012

பங்குனி மாதம் 14– ம் நாள்

திருவள்ளுவர் ஆண்டு 2043

படிக்க

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின்கடித எண். 31092/திட்டம்3/ 2011. நாள் 23.9.2011, 30.9.2011 மற்றும் 10.1.2012.

-------

ஆணை

2011–2012–ம் ஆண்டிற்கான தொழிலாளர், தொழிற்சாலைகள் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது:

''கடலூர் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் 1981–ம் ஆண்டு துவங்கப்பட்டு 264 இருக்கைகள் கொண்ட 8 தொழிற் பிரிவுகளுடன் அரசு தொழிற்பயிற்சி நிலைய (பொது) வளாகத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது. அரசு மகளிர் பயிற்சியாளர்கள் சிரமமின்றி பயிற்சி பெறவேண்டும் என்ற நோக்கில், இந்த ஆண்டு கடலூர் மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ரூ.2.30 கோடி செலவில் தனி கட்டடம் கட்டித் தரப்படும்.''

2. மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், மத்திய அரசின் நெறிமுறைகளின்படி கடலூர் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டிடம் கட்டத் தேவையான நிலம் கடலூர் (பொது) அரசு தொழிற் பயிற்சி நிலைய வளாகத்தில் உள்ளது எனவும், மேற்கண்ட தொழிற் பயிற்சி நிலையத்தில் இயங்கி வரும் தொழிற் பிரிவுகள் மற்றும் நிர்வாக கட்டிடங்களுக்காக 1283 ச.மீ இடவசதி தேவைப்படும் எனவும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். பணிமனை/ வகுப்பறை /நிர்வாக கட்டிடம் முதலிய (1283 ச.மீ) கட்டிட பணிகளுக்காக (பாதுகாப்பு சுவர் உட்பட) ரூ.220.00 இலட்சமும், பவர் வயரிங் வகைக்காக ரூ10.00 இலட்சமும் ஆக